இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 137 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – மார்கழி 11 – வியாழக்கிழமை 26 டிசம்பர் 2024 – மதுரை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 137 : Thiruvalluvar Year - 2055 - Margazhi 11 - Thursday 26 December 2024 - Madurai 12 Pages ₹ 5.00

### பேரறிவுச் சிலையின் வெள்ளி விழா! ஆர்வமுடன் பங்கேற்கும் இளைய தலைமுறை! அய்யன் வள்ளுவர் வகுத்த

# தமிழ் வாழ்வியல் நெறியை அனைவருக்கும் கொண்டு சேர்ப்பதில் மகிழ்ச்சி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

சென்னை, டிச. 26-

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் குமரிமுனையில் 133 அடி அய்யன் திருவள்ளுவர் சிலை அமைத்து 25 ஆண்டுகள் ஆனதையொட்டி வெள்ளி விழா - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால் 30, 31 ஆகிய இரு தினங்களில் எழிலார்ந்த முறையில் விழா நடைபெறுகின்றது. இதனை முன்னிட்டு தமிழ்நாடு செய்தித்துறை போட்டிகளுக்கு ஏற்பாடு செய்திருந்தது. இப்போட்டிகளில் பங்கேற்றிட 17, 788 பேர் விண்ணப்பித்திருந்தனர். இதனை, 'இளைய தலைமுறையினர் அய்யன் வள்ளுவர் வகுத்துள்ள தமிழ் வாழ்வியல் நெறியை அனைவருக்கும் கொண்டு சேர்ப்பதில் மகிழ்கிறேன்' என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பெருமிதத்துடன் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.**

இதுபற்றிய விபரம் வருமாறு:-

கன்னியாகுமரியில் கடல் நடுவே உள்ள பாறையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் அய்யன் திருவள்ளுவர் சிலை நிறுவப்பட்டு 25 ஆண்டுகள் - வெள்ளி விழா கொண்டாடப்படுகிறது. இதனையொட்டி தமிழ்நாடு அரசு சார்பில் திராவிட மாடல் அரசின் நாயகர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால் வருகிற 30, 31 தேதிகளில் திருவள்ளுவர் சிலை வெள்ளி விழா கொண்டாடப்பட உள்ளது.



முதல் 2 நாட்கள் நடைபெறும் விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று சிறப்பிக்க உள்ளார்.

அப்போது திருவள்ளுவர் சிலைக்கும், விவேகானந்தர் நினைவு மண்டபத்துக்கும் இடையே அமைக்கப்பட்டு வரும் கண்ணாடி பாலத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைக்கிறார்.

திருவள்ளுவர் சிலை அமைத்து 25 ஆண்டு கால - வெள்ளி விழாவினை குறிக்கும் வகையில் கடந்த 20ஆம் தேதி வெளியிட்ட சமூக வலை தளப் பதிவில் "சமத்துவம் போற்றும் உலகப் பொதுமறை படைத்த வள்ளுவருக்கு, குமரி எல்லையில் வானுயரச் சிலை அமைத்து 25 ஆண்டுகள். மூப்பிலா தமிழில் முப்பால் படைத்த திருவள்ளுவருக்கு கலைஞர் அமைத்த சிலையை Statue Of Wisdom ஆக கொண்டாடுவோம்." என்று குறிப்பிட்டு இருந்தார்.

இந்நிலையில் அய்யன் திருவள்ளுவர் சிலை அமைத்து 25 ஆண்டு கால - வெள்ளி விழாவினை கொண்டாடும் வகையில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை சார்பில் பல்வேறு திருக்குறள் போட்டிகள் நடத்தப்படும் என்று அறிவித்து இருந்தது.

- **திருக்குறள் ஒப்பித்தல் போட்டி,**
- **கட்டுரைப் போட்டி**
- **குறும்படப் போட்டி**
- **கவிதைப் போட்டி**
- **சுயமிப் (செல்ஃபி) போட்டி**
- **ஓவியப் போட்டி**

தமிழ் மீதும் பற்று கொண்டு ஆர்வமுடன் பதிவு செய்துள்ளதை கண்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் தளப்பதிவில் கூறியிருப்பதாவது:

"வள்ளுவ முனைதனில் வானுயர நிற்கும் பேரறிவுச் சிலையின் வெள்ளி விழாக் கொண்டாட்டங்களில் ஆர்வமுடன் பங்கெடுக்கும் இளைய தலைமுறை, அய்யன் வள்ளுவர் வகுத்துள்ள தமிழ் வாழ்வியல் நெறியை அனைவருக்கும் கொண்டு சேர்ப்பதில் மகிழ்கிறேன். வள்ளுவம் போற்றுதும்.

> **"வள்ளுவ முனைதனில் வானுயர நிற்கும் பேரறிவுச் சிலையின் வெள்ளி விழாக் கொண்டாட்டங்களில் ஆர்வமுடன் பங்கெடுக்கும் இளைய தலைமுறை, அய்யன் வள்ளுவர் வகுத்துள்ள தமிழ் வாழ்வியல் நெறியை அனைவருக்கும் கொண்டு சேர்ப்பதில் மகிழ்கிறேன்! வள்ளுவம் போற்றுதும்!"**

வள்ளுவம் என்பது வாழ்வியல் நெறியாக மாற வேண்டும். சமுதாயம், குறள் சமுதாயமாக மலரணும். வேற்றுமையின் வேர்களை கிள்ளி எறிய வள்ளுவ மருந்தே பொது மருந்தாக மாற வேண்டும். வாழிய குறளும், வள்ளுவன் புகழும், வாழிய வாழியவே…" இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள பதிவில் தெரிவித்துள்ளார்.

---

### மக்கள் தொகை கணக்கெடுப்பை நடத்திட கூட்டணியில் குலாவும் மோடி அரசை கேட்க அன்புமணிக்கு தைரியம் உண்டா?

# பா.ம.க.வில் மூத்தவர்களையெல்லாம் தள்ளிவிட்டு அன்புமணி எப்படி தலைவர் ஆனார்?

## அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் அடுக்கடுக்கான கேள்விகள்!

சென்னை, டிச.26-

**மக்கள் தொகை கணக்கெடுப்பை நடத்த வேண்டும் என கூட்டணியில் குலாவும் மோடி அரசை கேட்க அன்புமணிக்கு தைரியம் இருக்கிறதா? எனவும் தங்கள் கட்சியிலேயே மூத்தவர்களை எல்லாம் தள்ளிவிட்டு அன்புமணி எப்படி தலைவர் ஆனார்? என்றும் போக்குவரத்துத்துறை அமைச்சர் எஸ். எஸ். சிவசங்கர் கேள்வி எழுப்பியுள்ளார்.**

அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



ஒவ்வொரு முறையும் தேர்தல் நெருங்கி வரும் நிலையில் வன்னிய சமூக மக்களை பகடைக்காயாக வைத்து, தனது கூட்டணி பேரத்தை வலுப்படுத்த பேரம் பேசி வரும் அய்யா ராமதாசும் அவரது தவப்புதல்வன் அன்புமணி ராமதாசும் தற்போது அடுத்த தேர்தலுக்கு ஆயத்தமாகிவிட்டார்கள். இதோ மறுபடியும் மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தினை அரசியல் சூதில் பணயம் வைத்து, தனது அரசியல் பேரத்தை வலுப்படுத்த துடிக்கிறார்கள். ஆனால், அவர்களை நம்பி என்றும் ஏமாறப்போவதில்லை என்பதை கடந்த நாடாளுமன்ற தேர்தலிலேயே மக்கள் அவர்கள் முகத்தில் அடித்தாற்போல் தெரிவித்து விட்டனர்.

### வன்னிய மக்களுக்காக என நீலிக்கண்ணீர் வடிக்கும் அன்புமணி!

எங்களது பொதுச்செயலாளர் மாண்புமிகு அமைச்சர் துரைமுருகன் அவர்களை குறிப்பிட்டு, வன்னியர் சமூக மக்கள் மீது தங்களுக்கு பாசம் உள்ளது போல நீலிக் கண்ணீர் வடித்து நடித்திருக்கிறார் அன்புமணி ராமதாஸ்.

கூட்டணி கட்சியிடம் பிளஸ் 1 என்ற ராஜ்யசபா சீட் ஒப்பந்தம் போட்டு அந்த சீட்டை அன்புமணிக்கு மட்டுமே தாரை வார்ப்பார்கள். ஒன்றிய அமைச்சர் பதவி என்றாலும் அதனையும் தன் மகன் அன்புமணிக்குத் தான் வாங்கிக் கொடுப்பாரா ராமதாஸ்? இதுதான் ராமதாஸ் அவர்களின் வன்னியர் பாசமா? என்று நாங்கள் கேட்க எவ்வளவு நேரம் ஆகும்?

பாமகவிற்காக அன்றுதொட்டு இன்று வரை உழைத்து வரும் G.K.மணி, AK மூர்த்தி போன்ற எத்தனையோ மூத்த தலைவர்கள் இருந்தும் அன்புமணி ராமதாஸை அடுத்த தலைவராக்கியது எதனால்? தலைவர் பதவியில் இருந்த தீரன் எங்கே போனார்? ஜி.கே.மணி வகித்த தலைவர் பதவியை எதற்காக பிடுங்கி அன்புமணிக்கு கொடுத்தார்கள்?

### அன்புமணி அளவிற்கு அந்த கட்சியில் யாரும் உழைக்கவில்லையா?

பாமக வில் வேறெவருமே அன்புமணி அளவிற்கு உழைக்கவில்லையா? என்று நாங்கள் கேட்க எவ்வளவு நேரம் ஆகும்?

பாமகவிற்காக உழைத்து ஓடாய் தேய்ந்து உயிர்விட்ட காடு வெட்டி குரு அவர்களைக் கூட இறுதி காலத்தில் கைவிட்ட உங்களுக்கு வன்னியர் பாசம் பற்றி எல்லாம் பேச தகுதி உண்டா? அவரது குடும்பத்தின் இன்றைய நிலை என்ன?

வன்னியர் இடஒதுக்கீட்டு விவகாரத்தில் தி.மு.க.வை நிபந்தனையின்றி ஆதரிக்க தயார் என்றெல்லாம் வீர வசனம் பேசியிருக்கிறார் அன்புமணி. அதற்கு முன்பு இடஒதுக்கீட்டிற்கே முட்டுக்கட்டையாக இருக்கும் பாஜக கூட்டணியை விட்டு வெளியேறிவிட்டு அன்புமணி பேசுவாரா?

### வன்னிய சமுதாய மக்களை எத்தனைகாலம் தான் ஏமாற்றுவீர்கள்!

பொய்க்கால் குதிரை ஓட்டி நானும் வன்னிய மக்களை காக்கும் ராஜாதான் என வாய் வேடம் போட்டால் எத்தனை காலத்துக்குத்தான் வன்னிய மக்கள் நம்புவார்கள்?

எடப்பாடி பழனிசாமி தலைமையிலான அதிமுகவோடு தேர்தல் கூட்டு சேர அவசரகதியில் அள்ளித்தெளித்த கோலமாக 10.5% இட ஒதுக்கீடு என்ற ஏமாற்று அறிவிப்பை அறிவித்தீர்கள். தேர்தல் தேதி அறிவிப்பதற்கு சில மணி நேரம் முன்புதான் அந்த அறிவிப்பு வெளியானது. அனைத்தும் அறிந்ததாய் சொல்லிக்கொள்ளும் ராமதாஸ் அவர்களுக்கு அப்போது தெரியாதா? அந்த இட ஒதுக்கீடு நீதிமன்றத்தால் நிறுத்திவைக்கப்படும் என்று? தெரியும். தெரிந்தேதான் நம்பவைத்து ஏமாற்றினார் அய்யா ராமதாஸ். தற்போதும் இடஒதுக்கீட்டினையே அழிக்கத் துடித்துக் கொண்டிருக்கும் ஒன்றிய பாஜக அரசோடு அரசியல் ஆதாயத்திற்காக கைகோர்த்துக் கொண்டு நாங்கள் இட ஒதுக்கீட்டிற்கு ஆதரவாக இருக்கிறோம் என ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள் தந்தையும் மகனும்!.

சாதிவாரி கணக்கெடுப்பு மட்டுமல்லாது வழக்கமான மக்கள் தொகை கணக்கெடுப்பையே எடுக்காமல் கிடப்பில் போட்டுள்ள பாஜகவை ஆதரித்து அவர்களோடு கூட்டணியில் இருக்கும் அன்புமணி, தமிழ்நாடு அரசு மக்கள் தொகை கணக்கெடுப்பை நடத்த வேண்டும் என்று பேசி வருவது அரசியல் ஆதாயத்திற்காக அன்றி வேறென்ன. மக்கள் தொகை கணக்கெடுப்பு என்பது ஒன்றிய அரசு மேற்கொள்வது. அதைத்தான் அதிகாரப்பூர்வ

> **பா.ம.க. தங்கள் அரசியல் நலனை மட்டுமே கருத்தில் கொண்டு மிகவும் பிற்படுத்தபட்ட மக்களுக்கு துரோகத்தை மட்டுமே செய்து வருகிறது. நன்றாய் படித்து வேலைக்கு சென்று வாழ்வில் சிறந்த நிலையை அடையக்கூடிய வாய்ப்புள்ள இளைஞர்களை எல்லாம், பிஞ்சிலேயே சாதி வெறி பாய்ச்சி நன்றாய் செழித்து வளர வேண்டிய அந்த இளைஞர்களை வெறும் களைகளாய் மாற்றிக் கொண்டிருப்பது தான் பா.ம.க.வின் சாதனை. மருத்துவராகவும், பொறியாளராகவும், மாவட்ட ஆட்சியராகவும் இன்னபிற அரசின் உயர் பதவிகளில் இடம்பெற வேண்டிய இளைஞர்களை உங்கள் அரசியல் நலனுக்காக தவறான வழியிலே வழிநடத்தி வரும் தங்களை இனியும் இச்சமூகத்து இளைஞர்கள் நம்பப்போவதில்லை.**

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

---

### மெரினா உணவுத்திருவிழா: ரூ.1.50 கோடிக்கு விற்பனை!

சென்னை, டிச.26-

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் சென்னை மெரினாவில் கடந்த 20ந்தேதி மகளிர் சுய உதவிக்குழுவினரின் உணவுத் திருவிழா துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. இதில் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலும் சிறப்பு வாய்ந்த பாரம்பரிய சைவ மற்றும் அசைவ உணவு வகைகள் விற்பனைக்கு வைக்கப்பட்டது.

உணவுத் திருவிழாவில் ராணிப்பேட்டை ஆற்காடு பிரியாணி, தருமபுரி ரவா கஜூர், சாமை வெண் பொங்கல், தினை இனிப்பு பொங்கல், கிருஷ்ணகிரி கம்பு பாயாசம், ஈரோடு அடை அவியல், சேலம் தட்டு வடை, கார பொறி, சிவகங்கை நெய் சாப்பாடு சிக்கன் கிரேவி, வேலூர் ராகி புட்டு, ராகி கொழுக் கட்டை, திண்டுக்கல் மட்டன் பிரியாணி,

கன்னியாகுமரி பொரிச்ச பழம், கிழங்கு மீன் கறி உள்ளிட்ட உணவு வகைகளை பொதுமக்கள் விரும்பி வாங்கி சாப்பிட்டனர். மொத்தம் 286 வகையான உணவுகள் வைக்கப்பட்டு இருந்தது.

உணவுத் திருவிழா டிக்கெட் கவுண்ட்டர்களில் பொதுமக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து டிக்கெட் பெற்று சென்றனர். உணவு வழங்கும் அரங்கிலும் நீண்ட வரிசையில் காத்திருந்து தங்களுக்கு தேவையானவற்றை மக்கள் வாங்கி விரும்பி சாப்பிட்டனர்.

இந்நிலையில் மெரினாவில் கடந்த 5 நாட்களாக நடந்த உணவுத் திருவிழாவில் 3.20 லட்சம் மக்கள் கலந்துகொண்டு, மகளிர் சுய உதவிக் குழுவினரின் ரூ.1.50 கோடி மதிப்பிலான தயாரிப்பு பொருட்கள், உணவுகளை வாங்கி உள்ளனர் 45 அரங்கங்களில் 286 வகையான சைவ, அசைவ உணவுகள், ஆயத்த உணவுப் பொருட்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் ஆகியவை விற்பனை செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

---

### இந்திய ரூபாயின் மதிப்பு வீழ்ச்சி!

புதுடெல்லி, டிச.26-

அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு வரலாறு காணாத வகையில் திங்களன்று (டிசம்பர் 23) 85.12 ஆக சரிந்தது. தொடர்ந்து நேற்று முன்தினம் [செவ்வாய் கிழமை] 1 டாலரின் மதிப்பு 85.18ஆக இருந்த நிலையில், நேற்று [புதன்கிழமை] மேலும் சரிந்து 85.41ஆக உள்ளது. தொடர்ச்சியாக 6வது முறையாக இந்த சரிவு ஏற்பட்டுள்ளது.

தொடர்ந்து கச்சா எண்ணெய் விலை உயர்வு, ரூபாயின் மதிப்பை வீழ்ச்சியடையச் செய்து வருகிறது. அமெரிக்கக் கடன் பத்திரங்கள் அதிகரிப்பு மற்றும் இறக்குமதியாளர்களிடமிருந்து வலுவான டாலர் தேவை ஆகியவை இந்த வீழ்ச்சிக்குக் காரணம்.

மேலும் மாத இறுதியில் டாலரின் தேவை அதிகரித்தது மற்றும் அமெரிக்காவில் டொனால்டு டிரம்ப் நிர்வாகத்தின் இறக்குமதி வரி பற்றிய அச்சமும் இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

இந்தியாவின் அந்நியச் செலாவணி கையிருப்பு ஆறு மாதங்களில் இல்லாத அளவுக்குக் குறைந்துள்ளது. எதிர்காலத்தில் நிலையான ரூபாய் மதிப்பு சரிவு தொடரலாம் என்று வர்த்தகர்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.